DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.23/2022**

| | | |
|---|---|---|
| Name | : | சதீஷ்குமார் **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of November 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.1 ஆகும். Discharge Summary–ன் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.2 ஆகும். மனுதாரரின் ஸ்கேன் ரிப்போர்ட்டின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.3 ஆகும். சிகிச்சை விபரக் குறிப்புகளின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.4 ஆகும். டிஎன் 76 ஹச் 1336 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் ஆய்வறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.5 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னுடைய அம்மா விபத்திற்கு முன்பாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் மருத்துவக் குறிப்புகளில்என்னுடைய

அம்மா மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் விபத்திற்கு பின்பு அவர் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார். விபத்தின் போது என்னுடைய அம்மா மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் அதற்கு அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார் என்றாலும் சரியல்ல. என்னுடைய அம்மா மனநலம் பாதிக்கப்பட்டிருந்ததால் போக்குவரத்தைக் கவனிக்காமல் குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய அம்மாவின் வயது, வருமானத்தைக் காண்பிக்கும் ஆவணங்களைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய அம்மாவின் கவனக்குறைவினால் ஏற்பட்டதாலும், 1ம் எதிர்மனுதாரரால் ஏற்படவில்லை என்பதாலும், இந்த 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் ஒளிப்பட ஆவணங்கள் என்றும், உண்மை நகல் அல்ல என்றால் மருத்துவ சீல் உள்ளது. அதனால் இந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியிருக்கும்இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு ஏற்பட்டகாயம் என்று மருத்துவர் கூறியிருக்கிறார் என்றால் ஒரு வருடமாக என்னுடைய தாயார் எந்த சுய நினைவும் இல்லாமல் உள்ளார், நான் தான் அவரைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். விபத்திற்கு பின்பு தான் என்னுடைய அம்மாவிற்கு மனநலம் பாதிப்படைந்தததாக கூறுவது பொய் என்றும், நான் தான் அவரைக் கவனித்துக் கொண்டிருந்தேன் என்று கூறுவதும் பொய் என்றும், அதிக இழப்பீடு பெறுவதற்காக இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.11.08 16:22:33 +0530